தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து-இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# கழக விளையாட்டு மேம்பாட்டு அணியினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## அணியின் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. வேண்டுகோள்!



சென்னை, ஜூலை 27-

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினைப் பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதி நிலை அறிக்கையாகத் தெரியவில்லை.

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த 2024-25ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களை வஞ்சிப்பதாக அமைந்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் பெயர் கூட நிதிநிலை அறிக்கை யில் இடம்பெறவில்லை என்று இந்தியா கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் குற்றம்சாட்டியதோடு அவையிலிருந்து வெளிநடப்புச் செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம்.

இந்தக் குற்றச்சாட்டிற்குப் பதிலளித்த நிர்மலா சீதாராமன், அனைத்து மாநிலங்களின் பெயர்களும் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டும் என்று அவசியம் இல்லை" என்று ஆணவமாகப் பதிலளித்துள்ளார்.

தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையிலும் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகம் தொடர்ச்சியாக இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டு வந்த போதும் நரேந்திர மோடி அரசு வன்மத்துடன் தொடர்ந்து வஞ்சகம் செய்து வந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு புயல் மற்றும் வெள்ளத்தால் ரூ.37ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், வெறும் 277 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இந்த நிதி நிலை அறிக்கையில் ஒரு பைசா கூட ஒதுக்கப் படவில்லை.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் "மாற்றாந்தாய்ப் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (ஜூலை 27, சனிக்கிழமை), காலை 10.00 மணியளவில், மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுவதறிவோம்!

தமிழ்நாடெங்கும் நடைபெறும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் நிர்வாகிகள், முன்னோடிகள், செயல்வீர்கள், வீராங்கனைகள் திரளாகப் பங்கேற்று - இந்த ஆர்ப்பாட்டத்தை பெரு வெற்றியடையச் செய்வோம்! வாரீர்! என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிச்செல்வி மாணிக்கம் தலைமையில்

# ஆயிரம் விளக்கு 111-வது வட்டத்தில் கொடியேற்று விழா! 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை–மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜூலை 27-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (27.7.2024, சனிக்கிழமை) பகல் 12 மணியளவில் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 111-வது வட்டம், மூர்ஸ் ரோடு, சுதந்திர நகரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் வெற்றிச்செல்வி மாணிக்கம் தலைமை தாங்குகிறார்.

111-வது வட்ட கழக செயலாளர் ஆயிரம் விளக்கு ஆர்.பாபு, 111-வது (அ) வட்ட கழக செயலாளர் எப்.பீட்டர்ஜான், ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி அமைப்பாளர் ஜி.மாணிக்கம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் கலை கதிரவன், மாவட்ட அவைத்தலைவர் து.விக்டர், மாவட்ட துணைச்செயலாளர் வி.எஸ். கலைசெல்வன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர், சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு கழகக் கொடியேற்றுகிறார்.

மக்களவைக் குழுத் துணைத் தலைவர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாநில மருத்துவ அணி செயலாளர் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் எஸ்.அழகிரி சதாசிவம், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பா.பிரகாஷ், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் துபாய் விஜய், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆர்.என்.துரை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டீன்பாபு, ஜெ.நற்குணநாதன், பா.இராபர்ட், பகுதி கழக நிர்வாகிகள் எம்.ஆர்.ஜம்புலிங்கம், ஜி.ரவி, எம்.வெங்கடேசன், டி.வைலட்மேரி, எம்.ஜெயகுமார், வட்ட செயலாளர்கள் கோ.யுவராஜ், ப.மகேஷ், டி.தேவராஜ், எம்.என்.விஷ்னு, எஸ்.சத்தியபெருமாள், எல்.தவமணி, எஸ்.என்.கே.ராமன், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.எச்.இம்ரான்கான், எம்.மோகனவேல், டி.டேனியல், என்.அங்காளம், வி.எஸ். கவாஸ்கர், எச்.ஜானி, ஏ.கமலகண்ணன், எஸ்.ஆனந்தி, வட்டக்கழக நிர்வாகிகள் பி.விஸ்வநாதன், டி.அருள் தாஸ், பி.பவானி, டி.ராஜாராமு, பி.உமாசங்கர், ஜி.சுந்தர்ராஜன், டி.வெங்கடேஷ், எஸ்.சரவணன், என்.மணி. ஜெ.எம்.பழனி, பி.விஜயகுமார், ஜி.பாலமுருகன், பி.ஹேமலதா, எஸ்.பிரதீப், பி. பார்வதி, ஆர்.மலர், பி.மஞ்சுளா, டி.சாந்தி, மா.குமார், எஸ்.எஸ்.ராம்போபாபு, எம்.அரி, ஜி.கே.தட்சணாமூர்த்தி, பி.லோகநாதன், பி. உலகநாதன், டி.தமிழ்செல் வன், ஏ.மனோஜ்குமார், எஸ்.குமரேசன், டி.தனப்பெருமாள், டி.பிர வீன்குமார், வி.தினேஷ், எஸ்.சுரேஷ்குமார், ஜெ.அந்தோணி, ஆர்.சஞ்சய்குமார், வி.ராஜா, எஸ்.தினேஷ், பி.முருகா, வி.விக்னேஷ்வரன், பி. பிரேம்குமார், எம்.மணிகண்டன், பி.சரத்குமார், எஸ்.நரேஷ்குமார், எம்.தேவா, பி.பிரவீன்குமார், பி.ஜேம்ஸ், எம்.பிரக்கேஷ், வி.சூர்யா, எம்.பிரத்தேஷ், ஏ.விக்கி உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

111-வது வட்ட கழக அவைத்தலைவர் சி.பார்த்தசாரதி, ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி இ.அ.து. அமைப்பாளர் பா.சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.07.2024) சென்னை, முகாம் அலுவலகத்தில், 2018ல் நடந்த சாலை விபத்தில் சிக்கி படுகாயமடைந்து அசைவற்ற நிலையில் கஷ்டப்படும், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பகுதியைச் சார்ந்த 16 வயது ஆகாஷ் ஹரி எனும் சிறுவன் மற்றும் சிறுவனின் தாயார் கடந்த ஆறு ஆண்டுகள் மேலாக அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை பலனளிக்கவில்லை, தொடர் சிகிச்சை வழங்கிட உதவி கோரினர். உடனடியாக அமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிறுவனுக்கு சிறப்பு சிகிச்சை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு நடைபெற உள்ள தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பாஜக மோடி அரசின் பட்ஜெட்டை கண்டித்து திருவள்ளூரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகத்தினார் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார். உடன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் பா.உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, தொகுதி பார்வையாளர் ராஜாகுப்புசாமி, ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம், சி.என்.சண்முகம், பெ.பழனி, ஆர்த்தி ரவி, ஜி.ரவீந்திரா, வி.வினோத்குமார், பிடி.சந்திரன், டி.கிறிஸ்டி, என்.கிருஷ்ணன், டி.ஆர்.கே.பாபு, மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

